යහපාලනය සඳහා වූ ජාතික පෙරමුණ
நல்லாட்சிக்கான தேசிய முன்னணி
National Front for Good Governance

# CONSTITUTION

# நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் யாப்பு

## 1. கட்சியின் பெயர்

கட்சியின் பெயர் “நல்லாட்சிக்கான தேசிய முன்னணி” என அழைக்கப்படும். இந்த யாப்பில் இனிமேல் இது “முன்னணி” என குறிப்பிடப்படும்.

## 2. இலக்குகளும் நோக்குகளும்

### 2.1 – தொலைநோக்கு (Vision).

நல்லாட்சிக் கொள்கைகள், விழுமியங்களின் அடிப்படையிலான ஆட்சி முறை நிலவும், நீதியும் சமாதானமும் சுபீட்சமும் நிறைந்த, அபிவிருத்திடைந்த பன்மைத்துவ இலங்கைத் தேசம்.

### 2.2 –பணி (Mission)

அரசாங்கத்தின் பிரதான கூறுகளான சட்டவாக்கத் துறை, நிர்வாகத்துறை, நீதித்துறை என்பவற்றிலும் பொதுத் துறை நிர்வாகத்திலும், மற்றும் மாகாண சபைகள், உள்ளூராட்சி மன்றங்கள் அவற்றின் கீழ் உள்ள நிர்வாகங்கள், சிவில் சமூக அமைப்புக்கள் அனைத்திலும் நல்லாட்சிக் கோட்பாடுகள், விழுமியங்கள், நடைமுறைகள் என்பவற்றை வினைத்திறனாக பிரயோகிப்பதற்கும், செயற்படுத்துவதற்கும் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளல். இவற்றின் மூலம் சிறந்த இலங்கைத் தேசத்தைக் கட்டியெழுப்பல்.

### 2.3 – நோக்கங்கள் (Objectives)

பின்வரும் நோக்கங்களை அடிப்படையாக கொண்டு முன்னணி தனது அரசியல் வேலைத்திட்டங்களைக் கட்டமைத்துள்ளது.

2.3.1 உணர்ச்சிபூர்வமாக அன்றி அறிவுபூர்வமாக சிந்தித்து, அரசியலில் பங்கேற்பதற்கான அரசியல் விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்தல்.

2.3.2 நல்லாட்சி அரசியல் சிந்தனையை மக்களிடையே பரவலாக்குவதும், ஊக்குவித்தலும், மேம்படுத்தலும்.

2.3.3 நீதி, சுதந்திரம், சமத்துவம் ஆகியவற்றை நிலைபெறச் செய்தல். சமூகத்தின் நலிந்த பிரிவினருக்கும் ஒடுக்கப்பட்ட மக்களுக்கும் உதவுதல்.

2.3.4 இனம், மதம், குலம், சாதி பால் மற்றும் பிரதேச ரீதியான வேறுபாடுகளுக்கு அப்பால் "நாம் இலங்கையர்" என்ற எண்ணக்கருவின் அடிப்படையில் மக்களிடையே தேசிய நல்லிணக்கத்தையும் ஒருமைப்பாட்டையும் உருவாக்கக்கூடிய அரசியல் சிந்தனையை உருவாக்கல், வளர்த்தல், மேம்படுத்தல்.

2.3.5 அரசியலை ஒரு சமூகப் பொறுப்புணர்ச்சியாகவும் தேசியக் கடமையாகவும் செய்யக்கூடியவர்களாக. முன்னணியின் அங்கத்தவர்களையும் ஆதரவாளர்களையும் பயிற்றுவித்தல், உருவாக்கல்.

2.3.6 அரசியல் அதிகாரத்தை மக்கள் நலனுக்காக மாத்திரம் பயன்படுத்தும், பொறுப்புணர்ச்சியும் கடமையுணர்வும் மிக்க மக்கள் பிரதிநிதிகளை உருவாக்கல்.

2.3.7 நாட்டின் பொது நன்மைக்காகவும், பொது இலக்குகளுக்காகவும் விழுமிய அடிப்படையில் செயற்படும் முற்போக்கான அரசியல் கட்சிகள், தொழில் சங்கங்கள், சிவில் சமூக அமைப்புகளுடன் இணைந்தும் ஒத்துழைத்தும் செயற்படல்.

2.3.8. கலந்தாலோசனை, கூட்டுப்பொறுப்பு, வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல் போன்ற நல்லாட்சி விழுமியங்களின் அடிப்படையில் செயற்படக் கூடிய நிர்வாகத்தையும் தலைமைத்துவத்தையும் முன்னணியின் அனைத்து மட்டங்களிலும் ஏற்படுத்தல்.

2.3.9 ஊழல் மோசடி வீண்விரயம் அதிகாரத் துஷ்பிரயோகம் இலஞ்சம் போன்ற நல்லாட்சிக்கு முரணான சமூக விரோத செயல்களுக்கு எதிராக செயற்படல்.

2.3.10 மக்களின் தேவைகளை மையப்படுத்தி நாட்டின் வளங்களை திட்டமிட்ட அடிப்படையில் வினைத்திறனாகவும் விளைதிறனாகவும் பயன்படுத்தி, நிலையான அபிவிருத்தியை ஊக்குவித்தலும் முன்னெடுத்தலும்.

2.3.11 சமாதான சகவாழ்வினூடாக பன்மைத்துவ இலங்கைத் தேசத்தைக் கட்டியெழுப்பல்

## 3. வழிமுறை (Methodology)

நாட்டின் சட்டங்களையும் ஒழுங்குகளையும் மதித்து, ஜனநாயக வழிமுறைகளையும் நல்லாட்சி விழுமியங்களையும் பின்பற்றியே முன்னணியின் அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படும்.

## 4.அங்கத்துவம் ( Membership)

### 4.1 அங்கத்துவத் தகைமைகள்

4.1.1 முன்னணியின் நோக்கங்களையும் செயத்திட்டங்களையும் ஏற்றுக் கொள்ளும் 18 வயதைப் பூர்த்தி செய்த இலங்கைப் பிரஜைகள் எவரும் முன்னணியின் ஆரம்ப அங்கத்தவராக இணைந்து கொள்வதற்கு விண்ணப்பிக்க முடியும்.

4.1.2 கட்சியில் இணைந்து கொள்கின்ற எவரும் முதலில் ஆரம்ப அங்கத்தவராகவே பதிவு செய்யப்படுவர்.

4.1.3 அவ்வாறு பதிவு செய்யப்படுகின்ற எவரும மற்றுமொரு அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியொன்றின் அங்கத்தவராகவோ அல்லது முன்னணியின் கொள்கைகளுக்கும் நோக்கங்களுக்கும் முரண்படும் ஏதாவதொரு அமைப்பின் அல்லது நிறுவனத்தின் அங்கத்தவராகவோ இருக்கக் கூடாது.

4.1.4 ஊழல், மோசடி, இலஞ்சம், வன்முறை, ஒழுக்க சீரகேடு போன்ற சமூக விரோத செயல்களில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டப்பட்டு தண்டனை பெற்றவராகவோ ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்கு உட்பட்டவராகவோ இருக்கக் கூடாது.

### 4.2 அங்கத்துவ வகைகள் (Categories of Membership)

**4.2.1** ஸ்தாபக அங்கத்தவர்கள் (Founder Members)

4.2.2 ஆரம்ப அங்கத்தவர்கள் (Primary Members)

4.2.3 இணை அங்கத்தவர்கள் (Associate Members)

4.2.4 செயற்பாட்டு அங்கத்தவர்கள் ( Active Members)

4.2.5 கௌரவ அங்கத்தவர்கள் ( Honorary Members)

### 4.3 ஸ்தாபக அங்கத்தவர்கள் (Founder Members)

4.3.1 முன்னணியின் உருவாக்கத்திலும் அதன் வளர்ச்சியிலும் அரப்பணிப்புடனும் தொடர்ச்சியாகவும் செயற்பட்டு வரும் சிரேஷ்ட அங்கத்தவர்கள், தலைமைத்துவ சபையினால் உறுதி செய்யப்பட்டு ஸ்தாபக அங்கத்தவர்களாவர்களாக அங்கீகரிக்கப்படுவர்.

4.3.2. ஸ்தாபக அங்கத்தவர்கள் முன்னணியின் நிரந்தர அங்கத்தவர்களாக இருப்பதுடன், முன்னணியின் நிர்வாகக் கட்டமைப்பிலுள்ள தலைமைத்துவ சபை, முகாமைத்துவக் குழு,

அரசியல் குழு, பேராளர் அவை போன்றவற்றில் முக்கிய பதவிகளை வகிப்பவர்களாகவும் இருப்பர்.

4.3.3 முன்னணியின் உள்ளக தேர்தல்களிலும், தலைமைத்துவ சபை அவசியம் என கருதும் விடயங்களிலும் ஸ்தாபக அங்கத்தவர்களுக்கு வாக்களிக்கும் உரிமை உண்டு.

**4.4 ஆரம்ப அங்கத்தவர்கள்** (Primary Members)

4.4.1 அங்கத்துவ தகைமைகளைப் பெற்றவர்கள் முன்னணியின் ஆரம்ப அங்கத்தவராக இணைந்து கொள்வதற்கு விண்ணப்பிக்க முடியும்.

4.4.2 இவ்வாறன விண்ணப்பங்கள் வட்டார அல்லது கிராம / நகர அல்லது உள்ளூராட்சி மன்ற அல்லது மாவட்ட செயற்குழுவினால் பரிசீலிக்கப்பட்டு தேசிய அங்கத்துவ குழுவுக்கு சமர்ப்பிக்கப்படும்.

4.4.3 இவ்வாறு சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் தேசிய அங்கத்துவ குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் பட்சத்தில், குறித்த விண்ணப்பதாரிகள் முன்னணியின் ஆரம்ப அங்கத்தவர்களாக இணைத்துக் கொள்ளப்படுவர்.

4.4.4 முன்னணியின் உள்ளக தேர்தல்களிலோ முக்கிய தீர்மானங்களின போதோ ஆரம்ப அங்கத்தவர்களுக்கு வாக்களிக்கும் உரிமை இல்லை.

**4.5 இணை அங்கத்தவர்கள்** (Associate Members)

4.5.1 ஆரம்ப அங்கத்தவர் ஒருவர், தான் ஆரம்ப அங்கத்தவராக இணைத்துக் கொள்ளப்பட்டதிலிருந்து ஒரு வருடத்தின் பின்னர், இணை அங்கத்துவத்திற்கு விண்ணப்பிக்க முடியும்.

4.5.2 இணை அங்கத்துவத்திற்கு விண்ணப்பிக்கும் ஒருவர், தனது விண்ணப்பத்தை வட்டார அல்லது கிராம / நகர அல்லது உள்ளூராட்சி மன்ற அல்லது மாவட்ட செயற்குழுவினூடாக தேசிய அங்கத்துவ குழுவின் பரிசீலனைக்கு அனுப்ப வேண்டும்.

4.5.3 தேசிய அங்கத்துவ குழுவின் சிபார்சின் பிரகாரம் தலைமைத்துவ சபை, இணை அங்கத்துவ விண்ணப்பங்கள் தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்ளும்.

4.5.4 வட்டார அல்லது கிராம / நகர அல்லது உள்ளூராட்சி மன்ற மட்டத்திலான முன்னணியின் உள்ளக தேர்தல்களிலும் முக்கிய தீர்மானங்களின்போதும் வாக்களிக்கும் உரிமை, இணை அங்கத்தவர் களுககு உண்டு.

**4.6 செயற்பாட்டு அங்கத்தவர்கள்** ( Active Members)

4.6.1 இணை அங்கத்தவராக இணைத்துக்கொள்ளப்பட்ட ஒருவர் முன்னணியின் கொள்கைகள், விழுமியங்கள், நடைமுறைகள், இலக்குகள், மற்றும் அரசியல் கலாசாரம் என்பவற்றை மனப்பூர்வமாக ஏற்று, முன்னணியின செயற்பாடுகளில் குறைந்தது மூன்று (3) வருடங்கள் ஆர்வத்துடனும் தொடர்ச்சியாகவும் ஈடுபடுவாராயின், அவர் செயற்பாட்டு அங்கத்தவராக இணைத்துக் கொள்ளப்படுவார்.

4.6.2 அங்கத்துவ குழுவின் சிபார்சின் பிரகாரம் தலைமைத்துவ சபை செயற்பாட்டு அங்கத்தவர்களின் விண்ணப்பங்கள் தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்ளும்.

4.6.3 செயற்பாட்டு அங்கத்தவர்களே முன்னணியின் பதவிகளுக்கும் பொறுப்புகளுக்கும் அமர்த்தப்படுவதற்கு தகைமையுடையோர். முன்னணியினால் மேற்கொள்ளப்படும் முக்கிய தீர்மானங்களின் போதும் உள்ளக தேர்தல்களிலும் வாக்களிக்கும் உரிமை செயற்பாட்டு அங்கத்தவர்களுக்கு உண்டு.

**4.7 கௌரவ அங்கத்தவர்கள்** ( Honorary Members)

4.7.1 முன்னணியின் செயற்திட்டங்களுக்கு வளம் சேர்க்கக் கூடிய, நிபுணத்துவப் பங்களிப்பு வழங்கக் கூடியோர் கௌரவ அங்கத்தவர்களாக இணைத்துக் கொள்ளப்படுவர். தலைமைத்துவ சபை அங்கத்தவர்களின் பிரேரணையின் பேரில், இவர்களது அங்கத்துவத்தை தலைமைத்துவ சபை அங்கீகரிக்கும்.

4.7.2 இவ்வாறு இணைத்துக் கொள்ளப்படும் கௌரவ அங்கத்தவர்கள் வாக்களிக்கும் உரிமை கொண்ட அங்கத்தவர்களாக அல்லாமல், முன்னணியின் விரிந்த நோக்கங்களுக்கும் செயற்பாடுகளுக்கும் அனுசரணையும் ஆதரவும் வழங்குவோராக இருப்பர்.

**4.8 அங்கத்துவம் இழத்தல் / அங்கத்துவம் வறிதாகுதல்**

பின்வரும் சந்தர்ப்பங்களில் ஒருவரது அங்கத்துவம் இழக்கப்படும். இது ஸ்தாபக அங்கத்தவர்களுக்கும் செல்லுபடியாகும்.

4.8.1 மரணம்

4.8.2 இராஜினாமா

4.8.3 ஒழுக்காற்று நடவடிக்கையின் மூலம் முன்னணியின் அங்கத்துவத்திலிருந்து நீக்கப்படல்.

4.8.4 மற்றுமோர் அரசியல் கட்சியில் இணைந்து கொள்ளல்.

4.8.5 ஊழல், மோசடி, இலஞ்சம், வன்முறை, ஒழுக்க சீர்கேடு போன்ற சமூக விரோத செயல்களில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் பேரில் நீதி மன்றத்தினால் தண்டனை வழங்கப்படல்.

## 5. நிர்வாகக் கட்டமைப்பு (Organizational Structure)

**5.1 நிர்வாக கட்டமைப்பின் அலகுகள்** (Units of Organizational structure)

5.1.1 தலைமைத்துவ சபை (Leadership Council)

5.1.2 முகாமைத்துவக் குழு (Management Committee)

5.1.3 அரசியல் விவகாரக் குழு (Political Affairs Committee)

5.1.4 அங்கத்துவக் குழு (Membership Committee)

5.1.4 பேராளர் அவை (Delegates Assembly)

5.1.5 தேசிய செயற்குழு (National Working Committee)

5.1.6 மாவட்ட செயற்குழு (District Working Committee)

5.1.7 கிராம / நகர அல்லது உள்ளுராட்சி மன்ற செயற்குழு (Village / City / Local Govt Working Committee)

5.1.8 வட்டார செயற்குழு (Ward Level Working Committee)

**5.2 தலைமைத்துவ சபை** (Leadership Council)

தலைமைத்துவ சபையே முன்னணியின் அதியுயர் சபையாகும்

**5.2.1 தலைமைத்துவ சபையின் கட்டமைப்பு**

5.2.1.1 இது பதினைந்து (15) பேரைக் கொண்டு அமைந்திருக்கும். இதில் குறைந்தபட்சம் மூன்றில் இரண்டு (2/3) பங்கு உறுப்பினர்கள், ஸ்தாபக அங்கத்தவர்களது பெயர்ப் பட்டியலிலிருந்து, ஸ்தாபக அங்கத்தவர்கள் வாக்களிப்பதன் மூலம் தெரிவு செய்யப்படுவர்.

5.2.1.2 ஸ்தாபக அங்கத்தவர்களிலிருந்து தலைமைத்துவ சபைக்குத் தெரிவு செய்யப்பட்டோர், தலைமைத்துவ சபையில் மிகுதியாக உள்ள மூன்றில் ஒரு 1/3 பங்கு அங்கத்தவர்களை, ஸ்தாபக அங்கத்தவர்களிலிருந்து அல்லது செயற்பாட்டு அங்கத்தவர்களிலிருந்து வாக்களிப்பின் மூலம் தெரிவு செய்வர்.

5.2.1.3 தலைமைத்துவ சபையின் பதவிக்காலம் நான்கு (4) வருடங்களாகும்.

5.2.1.4 தலைமைத்துவ சபையின் பதவிநிலை உத்தியோகத்தர்களாக (Office Bearers) பின்வருவோர் ஏகமனதாக அல்லது வாக்களிப்பின் மூலம் தெரிவு செய்யப்படுவர்.

1. தவிசாளர் (Chairman)
2. பிரதித் தவிசாளர் (Deputy Chairman)
3. பொதுச் செயலாளர் (General Secretary)
4. பொருளாளர் (Treasurer)
5. தேசிய அமைப்பாளர் (National Organizer)
6. உதவிச் செயலாளர் (Assistant Secretary)
7. உதவிப் பொருளாளர் (Assistant Treasurer)

**5.2.2 தலைமைத்துவ சபையின் பொறுப்புகள்**

5.2.2.1 முன்னணியின் கொள்கைகளை வகுத்தலும், வழிகாட்டல் தத்துவங்களை வடிவமைத்தலும்.

5.2.2.2 மூலோபாய, வருடாந்த திட்டங்களை அங்கீகரித்தலும் கருத் திட்டங்களை உருவாக்கலும்.

5.2.2.3 வரவு செலவுத்திட்டத்தை அங்கீகரித்தல்

5.2.2.4 முன்னணியின் சொத்துக்களைப் பராமரித்தலும் நிதி நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தலும்.

5.2.2.5 முன்னணியின் தீர்மானங்களை நிறைவேற்றலும் இறுதி அனுமதி வழங்கலும்.

5.2.2.6 கட்சியின் செல்நெறியைத் தீர்மானித்தல்.

5.2.2.7 அரசியல் வியூகங்களை வகுத்தல்.

## 5.3. முகாமைத்துவக் குழு (Management Committee)

### 5.3.1 முகாமைத்துவக் குழுவின் கட்டமைப்பு

5.3.1.1 குறைந்தபட்சம் ஐந்து (5) அங்கத்தவர்களைக் கொண்டு அமைந்திருக்கும்.

5.3.1.2 முகாமைத்துவக் குழுவிற்கான அங்கத்தவர்கள், பதவிநிலை உத்தியோகத்தர்களிலிருந்து தலைமைத்துவ சபையினால் தெரிவு செய்யப்படுவர்.

5.3.1.3 முகாமைத்துவக் குழுவின் பதவிக் காலம் இரண்டு (2) வருடங்களாகும்.

### 5.3.2 முகாமைத்துவக் குழுவின் பொறுப்புகள்

5.3.2.1 தலமைத்துவ சபையினால் மேற்கொள்ளப்படும் கொள்கைகள், திட்டமிடல்கள், தீர்மானங்களை எதிர்பார்க்கப்படும் விளைவுகளை அடையும் பொருத்தமான முறையில் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தல்

5.3.2.2 முன்னணியின் அனைத்து நிர்வாக நடவடிக்கைகளுக்கும் பொறுப்பாக செயற்படலும் மேற்பார்வை செய்தலும்.

## 5.4 அரசியல் விவகாரக் குழு (Political Affairs Committee)

5.4.1 இது தலைமைத்துவ சபையினால் நியமிக்கப்படும் .

5.4.2 இதன் எண்ணிக்கை காலத்திற்குக் காலம் தலைமைத்துவ சபையினால் தீர்மானிக்கப்படும்.

5.4.3 அரசியல் விவகாரக் குழுவின் பதவிக் காலம் இரண்டு (2) வருடங்களாகும்.

5.4.4 முன்னணியின் அரசியல் விவகாரங்களை ஒருங்கிணைத்து செயற்படுத்தும் குழுவாகவும், தலைமைத்துவ சபைக்கு

அவசியமான அரசியல் சார் ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் காலத்திற்குக் காலம் வழங்கும்.

**5.5 அங்கத்துவக் குழு** (Membership Committee)

5.5.1 இது தலைமைத்துவ சபையினால் நியமிக்கப்படும் .

5.5.2 இதன் எண்ணிக்கை காலத்திற்குக் காலம் தலைமைத்துவ சபையினால் தீர்மானிக்கப்படும்.

5.5.3 அங்கத்துவக் குழுவின் பதவிக் காலம் இரண்டு (2) வருடங்களாகும்.

5.5.4 முன்னணியின் அங்கத்துவ விவகாரங்களை ஒருங்கிணைத்து செயற்படுத்தும் குழுவாகவும், தலைமைத்துவ சபைக்கு அவசியமான அங்கத்துவம் சார் பிரேரணைகளையும் ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் காலத்திற்குக் காலம் வழங்கும்.

**5.6 பேராளர் அவை** (Delegates Assembly)

5.6.1 பேராளர் அவையின் கட்டமைப்பு

5.6.1.1 இது தலைமைத்துவ சபையினால் நியமிக்கப்படும்.

5.6.1.2 இதில் ஸ்தாபக அங்கத்தவர்கள் அனைவரும் அங்கத்தவர்களாக அங்கம் வகிப்பர்.

5.6.1.3 இதன் எண்ணிக்கை காலத்திற்குக் காலம் தலைமைத்துவ சபையினால் தீர்மானிக்கப்படும்.

**5.6.2 பேராளர் அவையின் பொறுப்புக்கள்**

5.6.2.1 முன்னணியின் பொது விவகாரங்களை ஒருங்கிணைத்து செயற்படுத்தும் அவையாகவும், தலைமைத்துவ சபைக்கு அவசியமான பிரேரணைகளையும் ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் வழங்கும் அவையாகவும் செயற்படும்.

5.6.2.2 முன்னணியின் யாப்பினை அங்கீகரிப்பதும், திருத்தம் செய்வதும் பேராளர் அவையின் பெரும்பான்மை தீர்மானத்தின் அடிப்படையில் செல்லுபடியாகும்.

**5.7 தேசிய செயற்குழு** ( National Working Committee)

முன்னணியின் தேசிய அளவிலான நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து செயற்படுத்தும் குழுவாக, தேசிய செயற்குழு அமைந்திருக்கும்.

**5.7.1 தேசிய செயற்குழுவின் கட்டமைப்பும் பொறுப்புக்களும்**

5.7.1.1 தேசிய செயற்குழுவானது, முன்னணியின் தலைமைத்துவ சபையிலுள்ள பதவிநிலை அங்கத்தவர்களையும், மாவட்ட பிரதிதிதிகள், பெண்கள் மற்றும் முன்னணியின் ஏனைய அணிகளின் பிரதிநிதிகளையும் உள்ளடக்கியதாக இருக்கும்.

5.7.1.2 தேசிய செயற்குழு உறுப்பினர்களின் எண்ணிக்கை, அங்கத்துவ வகை ஆகியன காலத்திற்கு காலம் தேவைக்கேற்ப தலைமைத்துவ சபையினால் நிர்ணயிக்கப்படும்.

5.7.1.3 தேசிய செயற்குழுவின் பதவிக் காலம் இரண்டு (2) வருடங்களாகும்.

**5.8 மாவட்ட செயற்குழு** ( District Working Committee)

குறித்ததொரு மாவட்டத்தில் முன்னணியின் செயற்பாடுகளுக்கு ஏற்ப மாவட்ட செயற்குழுக்கள் அமைக்கப்படும்.

**5.8.1 மாவட்ட செயற்குழுவின் கட்டமைப்பும் பொறுப்புக்களும்**

5.8.1.1 மாவட்ட செயற்குழுக்கள் அமைக்கப் படுவதற்கு குறித்த மாவட்டத்தில் குறைந்தபட்சம் மூன்று (3) செயற்பாட்டு அங்கத்தவர்களும் ஏழு (7) இணை அங்கத்தவர்களும் இருக்க வேண்டும்.

5.8.1.2 மாவட்ட -செயற்குழுக்களின் உறுப்பினர்களின் அதி கூடிய எண்ணிக்கை பதினைந்தாகும் (15).

5.8.1.3 மாவட்ட செயற் குழுவின் பதவிக் காலம் ஒரு (1) வருடமாகும்.

5.8.1.4 மாவட்ட ஒருங்கிணைப்பாளர், செயலாளர், பொருளாளர் ஆகிய பதவிகள் மாவட்ட செயற்குழுவில் காணப்படும். ஏனைய பதவிகளை தேவைக்கு ஏற்ப தலைமைத்துவ சபையின் அங்கீகாரத்துடன் உருவாக்கிக் கொள்ள முடியும்.

5.8.1.5 முன்னணியின் மாவட்ட மட்ட நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து செயற்படுத்தும் குழுவாக, மாவட்ட செயற்குழு அமைந்திருக்கும்.

**5.9. கிராம / நகர அல்லது உள்ளுராட்சி மன்ற செயற்குழு** ( Village / City or Local Government Working Committee)

குறித்ததொரு கிராமத்தில் அல்லது நகரில் முன்னணியின் செயற்பாடுகளுககு ஏற்ப கிராம/நகர அல்லது உள்ளுராட்சி மனற செயற்குழுக்கள் அமைக்கப்படடும்.

**5.9.1 கிராம / நகர அல்லது உள்ளுராட்சி மன்ற செயற்குழுவின் கட்டமைப்பும் பொறுப்புக்களும்**

5.9.1.2 கிராம/நகர அல்லது உள்ளுராட்சி மன்ற செயற்குழுக்கள் அமைக்கப்படுவதற்கு, குறித்த பிரதேசத்தில் குறைந்தது மூன்று (3) இணை அங்கத்தவர்கள் இருக்க வேண்டும்.

5.9.1.3 கிராம/நகர அல்லது உள்ளுராட்சி மன்ற செயற்குழுக்களின் உறுப்பினர்களின் அதி கூடிய எண்ணிக்கை பதினொன்றாகும் (11).

5.9.1.4 கிராம/நகர அல்லது உள்ளுராட்சி மன்ற செயற்குழுவின் பதவிக் காலம் ஒரு (1) வருடமாகும்.

5.9.1.4 கிராம/நகர அல்லது உள்ளுராட்சி மன்ற ஒருங்கிணைப்பாளர், செயலாளர், பொருளாளர் ஆகிய பதவிகள் கிராம/நகர அல்லது உள்ளுராட்சி மன்ற செயற்குழுவில் காணப்படும். ஏனைய பதவிகளை தேவைக்கு ஏற்ப தலைமைத்துவ சபையின் அங்கீகாரத்துடன் உருவாக்கிக் கொள்ள முடியும்.

5.9.1.5 முன்னணியின் கிராம/நகர அல்லது உள்ளுராட்சி மன்ற மட்டத்திலான நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து

செயற்படுத்தும் குழுவாக, கிராம/நகர அல்லது உள்ளூராட்சி மன்ற செயற்குழு அமைந்திருக்கும்.

**5.10 வட்டார செயற்குழு** ( Ward Level Working Committee)

குறித்த வட்டாரத்தில் முன்னணியின் செயற்பாடுகளுக்கு ஏற்ப, வட்டார செயற்குழுக்கள் அமைக்கப்படும்.

**5.10.1 வட்டார செயற்குழுவின் கட்டமைப்பும் பொறுப்புக்களும்**

5.10.1.1 வட்டார செயற்குழுக்கள் அமைக்கப்படுவதற்கு, குறித்த பிரதேசத்தில் குறைந்தது மூன்று (3) ஆரம்ப அங்கத்தவர்கள் இருக்க வேண்டும்.

5.10.1.2 வட்டார செயற்குழுக்களின் உறுப்பினர்களின் அதி கூடிய எண்ணிக்கை ஏழாகும் (7).

5.10.1.3 வட்டார செயற்குழுவின் பதவிக் காலம் ஒரு (1) வருடமாகும்.

5.10.1.4 வட்டார ஒருங்கிணைப்பாளர், செயலாளர், பொருளாளர் ஆகிய பதவிகள் வட்டார செயற்குழுவில் காணப்படும். ஏனைய பதவிகளை தேவைக்கு ஏற்ப தலைமைத்துவ சபையின் அங்கீகாரத்துடன் உருவாக்கிக் கொள்ள முடியம்.

5.10.1.5 முன்னணியின் வட்டார மட்டத்திலான நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து செயற்படுத்தும் குழுவாக, வட்டார செயற்குழு அமைந்திருக்கும்.

## 6. பதவி நிலைகளும் பொறுப்புகளும்

**6.1 தவிசாளர்** (Chairman)

6.1.1 முன்னணியை தலைமை தாங்கி வழி நடத்துவதுடன், முன்னணியின் நோக்கங்களையும் திட்டங்களையும

தலைமைத்துவ சபையினூடாக வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்வது தவிசாளரின் கடமையாகும்.

6.1.2 எந்தவொரு தீர்மானத்தையும் மேற்கொள்ளும் போது பொதுவாக முகாமைத்துவக் குழுவுடன் கலந்தாலோசித்தே எடுக்க வேண்டும். இருப்பினும், முன்னணி தொடர்பான அதிமுக்கியத்துவம் வாய்ந்த அல்லது தீர்க்கமான முடிவுகளை எடுக்கும் போது, கண்டிப்பாக தலைமைதத்துவ சபையுடன் கலந்தாலோசித்தே தீர்மானம் எடுக்கவேண்டும்.

6.1.3 முன்னணியின் பேச்சாளாராகவும் தலைமைத்துவ சபையின் இறுதித்தீர்மானங்களை அறிவிப்பவராகவும் செயற்படல்.

6.1.4 முன்னணியின் நிதிசார் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தல்.

6.1.5 முன்னணியின் பொதுத்தொடர்புகள், வெளிநாட்டுறவுகள், இராஜதந்திர செயற்பாடுகளைப் பேணுதல், ஒழுங்கமைத்தல்.

6.1.6 முகாமைத்துவ சபைக்கு தலைமைதாங்கி வழிநடாத்தல்

## 6.2 பிரதித் தவிசாளர் (Deputy Chairman)

6.2.1 தலைமைத்துவ சபையை வழிநடத்துவதற்கு தவிசாளருககு உதவியாக இருத்தல்.

6.2.2 தலைமைத்துவ சபையால் பணிக்கப்படும் விடயங்களையும் பொறுப்புக்களையும் செயற்படுத்தல்.

6.2.3 தவிசாளர் இல்லாத சந்தர்ப்பங்களில் அவரது பொறுப்புக்களையும் கடமைகளையும் முன்னணி சார்பாக முன்னெடுத்துச் செல்வது பிரதித்தவிசாளரின் பொறுப்பாகும்.

## 6.3 பொதுச் செயலாளர் (General Secretary)

6.3.1 கட்சியின் தலைமைத்துவ சபையினால் எடுக்கப்படுகின்ற தீர்மானங்களை நடைமுறைப்படுத்தும் பொறுப்பு செயலாளருக்குரியது.

6.3.2 தலைமைத்துவ சபை, முகாமைத்துவக்குழு, தேசிய செயற்குழு, பேராளர் அவை ஆகியவற்றை

ஒன்றுகூட்டுகின்ற, அவற்றிற்கான அழைப்பை விடுகின்ற பொறுப்பு பொதுச் செயலாளருக்கும் தவிசாளருக்கும் கூட்டாக உள்ளது.

6.3.3 தலைமைத்துவ சபையின் வழிகாட்டலில் எல்லாவிதமான கூட்டங்களினதும் நிகழ்ச்சி நிரல்களைத் தயாரித்தல். கூட்ட அறிக்கைகளைத் தயாரித்தல், உள்ளக வாக்கெடுப்பு நடைபெறுகின்ற சந்தர்ப்பங்களில் வாக்கெடுப்புக்களை நடாத்துதல்.

6.3.4 எல்லாவித கடிதத் தொடர்புகளையும் முன்னணியின் கொள்கைகளுக்கு அமைய மேற்கொள்ளல்.

6.3.5 சட்டரீதியாக செல்லுபடியாகும் விடயங்கள் தொடர்பான ஆவணங்கள், தேர்தல் ஆணைக்குழுவுடனான / தேர்தல் செயலகத்துடனான தொடர்பாடல் ஆவணங்கள் போன்றவற்றில் கீழ்வரும் மூவரினதும் (3) ஒப்பங்கள் இடப்படுவது கட்டாயமாகும்.

அ. பொதுச் செயலாளர்

ஆ. தவிசாளர்

இ. பதவிநிலை அங்கத்தவர்களுள் யாரேனும் ஒருவர்.

6.3.6 ஏனைய கட்சிகளுடனான மற்றும் அமைப்புக்களுடனான முன்னணியின் உறவுகளை பேணுபவராகத் தொழிற்படல்.

6.3.7 முன்னணியின் வருடாந்தத் திட்டத்தைத் தயாரித்து தலைமைத்துவ சபையின் அங்கீகாரத்தைப் பெறல்.

6.3.8 தலைமைத்துவ சபையின் அங்கீகாரத்தின் பிரகாரம் செய்யப்படுகின்ற உடன்படிக்கைகளில் கைச்சாத்திடல்.

6.3.9 முன்னணியினது தலைமைக்காரியாலயத்தின் பிரதம நிர்வாகியாகத் தொழிற்படல்

6.3.10 தலைமைத்துவ சபையினால் தீர்மானிக்கப்படுகின்ற விடயங்களை அமுல்படுத்தல்.

6.4 உதவிச் செயலாளர் (Assistant Secretary)

6.4.1 தலைமைத்துவ சபையின் தீர்மானங்களை அமுல்படுத்துவதற்கும் முன்னணியின் ஏனைய நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும், பொதுச் செயலாளருக்கு உதவியாக இருத்தல்.

6.4.2 பொதுச்செயலாளர் இல்லாத சந்தர்ப்பங்களில் அவரது பொறுப்புக்களையும் கடமைகளையும் முன்னணி சார்பாக முன்னெடுத்துச் செல்வது உதவிச் செயலாளரின் பொறுப்பாகும்.

6.5 தேசிய அமைப்பாளர் (National Organizer)

6.5 1 முன்னணியின் அங்கத்துவ கட்டமைப்புக்கான பொறுப்பாளராகச் செயற்படல்,

6.5.2 தேசிய, மாவட்ட, கிராமிய மட்ட செயற்குழுக்களை அமைத்தல், அமைப்பாளர்களை நியமித்தல், குழுக்களை ஒழுங்கமைத்தல்.

6.5.3 மாவட்ட ரீதியான அங்கத்தவர் சந்திப்புக்களை மேற்கொள்ளல்.

6.5.4 பெண்கள், இளைஞர் அணி போன்ற கட்டமைப்புக்களை தேசிய, மாவட்ட, கிராமிய மட்டங்களில் ஒழுங்கமைத்தல்.

6.5.5 அங்கத்தவர்களுக்கான பயிற்சிகளை ஏற்பாடு செய்தல்.

6.6 பொருளாளர் (Treasurer)

6.6.1 முன்னணியின் எல்லாவித நிதிச் செயற்பாடுகளுக்கும் பொறுப்பாளராகச் செயற்படல்,

6.6.2 அனைத்துவிதமான வங்கிக் கணக்குகள், நிதிசார் நடவடிக்கைகளுக்கான பிரதம பொறுப்பாளராக செயற்படல். அவை தொடர்பான எழுத்துமூல ஆவணங்களைப் பேணலும் பொறுப்புக்கூறலும்.

6.6.3 முன்னணியின் வரவு செலவுத் திட்டத்தைத் தயாரித்து தலைமைத்துவ சபையின் அங்கீகாரத்தைப் பெறல்.

6.6.4 முன்னணியின் நிதிப் பிரமாணங்களுக்கமைய நிதி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதை உறுதி செய்தல்.

**6.7 உதவிச் பொருளாளர் (Assistant Treasurer)**

6.7.1 முன்னணியின் நிதி நடவடிக்கைகளில் பொருளாளருக்கு உதவியாகச் செயற்படல்.

6.7.2 பொருளாளர் இல்லாத சந்தர்ப்பங்களில் முன்னணியின் நிதிச் செயற்பாடுகளுக்கு பொறுப்பாளராகச் செயற்படல்.

## 7. வருடாந்தப் பொதுக் கூட்டம்

7.1 முன்னணியின் தேசிய மட்ட வருடாந்த பொதுக்கூட்டமாக, பேராளர் மாநாடு அமையும். இதன் போது அந்தந்த மட்டங்களில் வருடந்த செயலாளர் அறிக்கை, வருடாந்த நிதி அறிக்கை சமர்ப்பிக்கப்படும். பேராளர் மாநாட்டுக்கான அழைப்பிதழ், கூட்டம் நடைபெறும் தினத்திற்கு இரண்டு வாரங்களுக்கு முன் அங்கத்தவர்களுக்கு கிடைக்கத்தக்கதாக பொதுச் செயலாளரினால் அனுப்பப்படல் வேண்டும்.

7.2 மாவட்ட, கிராம / நகர அல்லது உள்ளூராட்சி, வட்டார மட்டத்திலான வருடாந்தப் பொதுக் கூட்டம் ஒவ்வொரு வருடமும் நடைபெறும். இதன்போது அந்தந்த மட்டங்களில் வருடந்த செயலாளர் அறிக்கை, வருடாந்த நிதி அறிக்கை சமர்பிக்கப்படுவதோடு புதிய உத்தியோகத்தர்களும் தெரிவு செய்யப்படுவர்.

7.3 வருடாந்தப் பொதுக் கூட்டத்திற்கான அழைப்பிதழ், கூட்டம் நடைபெறும் தினத்திற்கு இரண்டு வாரங்களுக்கு முன் அங்கத்தவர்ளுக்கு கிடைக்கத்தக்கதாக அந்தந்த மட்டத்திலான செயலாளரினால் அனுப்பப்படல் வேண்டும்.

7.4 வருடாந்தப் பொதுகூட்டம் நடைபெறுவதற்கான நிறைவெண் ஐம்பது ஒரு வீதமாகும் (51%)

## 8 கட்சியின் ஒழுக்கக் கோவை

8.1 முன்னணியின் ஒழுக்கக் கோவையை, தலைமைத்துவ சபை தயாரித்து நடைமுறைப்படுத்தும்.

8.2 முன்னணியின் ஒழுக்கக் கோவைக்கு அமைவாக நடப்பது, அங்கத்தவர்களுக்கும் பதவி நிலை உத்தியோகத்தர் களுக்கும் கடமையாகும்.

8.3 கட்சியின் அங்கத்தவர்களை ஒழுக்கக்கோவைக்கு அமைவாக, இடைநிறுத்தவும் நீக்கவும் தலைமைத்துவ சபைக்கு அதிகாரமுள்ளது.

## 9 யாப்புக்கான வியாக்கியானமும் இறுதித் தீர்மானமும்

9.1 முன்னணியின் யாப்பு தொடர்பான வியாக்கியானம் தலைமைத்துவ சபைக்கே உரியது.

9.2 முன்னணி தொடர்பான எல்லா விடயங்களிலும், எவ்வகையான பிணக்குகளிலும் தலைமைத்துவ சபையின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

9.3 தலைமைத்துவ சபை அங்கததவர்களின் 51% (ஐம்பத்தொரு வீதம்) வீதமானோரின் சம்மதத்தின் பேரிலேயே இறுதித் தீர்மானம் செல்லுபடியாகும்.

## 10 யாப்புத் திருத்தம்

10.1 ஸ்தாபக அங்கத்தவர்களில் ஐம்பத்தொரு வீதத்தினரது (51%) அங்கீகாரத்தின் பேரில், தலைமைத்துவ சபை யாப்புத் திருத்தத்தை பிரேரிக்கும்.

10.2 தலைமைத்துவ சபையின் யாப்புத்திருத்தப் பிரேரணை பேராளர் மாநாட்டின் ஐம்பத்தொரு வீத (51%) அங்கத்தவர்களின் சம்மதத்துடன் நிறைவேற்றப்படும்.

MR Mohamed Najah
*General Secretary*

MM Abdur Rahman
*Chairman*

N Mohamed Siraj
*Deputy Chairman*

General Secretary
National Front for Good Governance
(NFGG)